PR/2018/21/T

# ஜப்பான் தூதரகம்


இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை
தொலைபேசி: 94-11-269-3831~3, தொலைநகல் : 94-11-269-8629
மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk


ஜுலை 16, 2018

ஊடக அறிக்கை

## ஜப்பானிய திரைப்படவிழா– 2018

**2018ம் ஆண்டிற்கான ஜப்பானிய திரைப்படவிழா, ஜுலை மாதம் 21ம், 22ம் திகதிகளில் கொழும்பு-7, பௌத்தலோக மாவத்தை இல.303ல் அமைந்துள்ள இலங்கை திரைப்படக்கூட்டுஸ்தாபன திரையரங்கில் இடம்பெறவுள்ளது. இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகம், ஜப்பானிலுள்ள ஜப்பானிய மன்றம் ஆகியவற்றுடன் தேசிய இளைஞர் சேவைகள் பேரவை, தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், ஷிப் ஃபோ வேர்ல்ட் யுத் அலுமினி அஸோசியேஷன் என்பன கூட்டாக இணைந்தே இந்த திரைப்பட விழாவை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.**

**அனைத்து வயதெல்லையைக் கொண்டவர்களாலும் ஒருங்கே ரசித்து மகிழக் கூடியதான, அண்மையில் தயாரிக்கப்பட்ட குடும்பப் பின்னணியைக் கொண்ட நான்கு திரைப்படங்களே இவ்வருடத்திரைப்பட விழாவில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. உண்மைக் கதையைப் பின்னணியாகக் கொண்ட 'இட்ஸ் ஏ பியுடிபுல் லைவ்', திகில் கதையம்சம் கொண்ட 'த கொம்பிளக்ஸ்', நகைச்சுவை திரைப்படமான 'கோல்டன் ஓச்செஸ்ரா', விஞ்ஞான கதைக் கருவைக் கொண்ட அனிமேஷன் திரைப்படமான 'டைம்ஸ் ஒவ் ஈவ்' ஆகிய திரைப்படங்களே இம்முறை திரையிடப்படவுள்ளன.**
**இந்தப் படங்கள் அனைத்தும் ஜப்பானிலும் வெளிநாடுகளிலும் இடம்பெற்ற திரைப்பட விழாக்களில் பெரும் வரவேற்பைப் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.**

**இப்படங்களைப் பார்வையிடுவதற்கான அனுமதி முற்றிலும் இலவசமாகும்.**

திரைப்பட நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 'இட்ஸ் ஏ பியுடிபுல் லைவ்' | - **ஜுலை**21 | **பி.ப** 3:00 . |
| 'த கொம்பிளக்ஸ்' | - **ஜுலை**21 | **பி.ப** 5.30 |

**'கோல்டன் ஓச்செஸ்ரா** - **ஜூலை**22 . **பி.ப** 3:00

**'டைம்ஸ் ஒவ் ஈவ்'** -**ஜூலை**22 **பி.ப** 5.30

***

மேலதீக விபரங்களுக்காக கலாசார பகுதியை தயதுசெய்து தொடர்புகொள்ளுங்கள்
தொலைபேசி: 011-269-3831~3 (ext.227)